2006 செப்டம்பர் 2]

மேலும் கட்டடமும் கட்டிய பிறகும்கூட, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவரைகுளம், செட்டிகுளம் போன்ற பகுதிகளில் பகுதிநேர நூலகங்கள் திறப்பதற்கு, பகுதிநேர நூலக ஊழியர்கள் அமர்த்தப்படாமல் இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பகுதிநேர நூலகம் திறப்பதற்கான, அரசு கூறுகின்ற எல்லா சட்ட திட்டங்களையும் முறைப்படி நடைமுறைப்படுத்திய பகுதிகளில், உடனடியாக ஊழியர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நூலகங்களிலே, ஊழியர்கள் ரூ.605 தொகுப்பு ஊதிய அடிப்படையிலே இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நூலகங்கள் மூன்று மணி நேரம்தான் அங்கே செயல்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கக்கூடியவகையிலே அந்தத் தகுதிகள் எல்லாம் அந்த ஊர்களில் இருக்கக்கூடிய நூலகங்கள் பெற்றிருந்தால், நிச்சயமாக அங்கே நூலகர்களை நியமித்து, அந்தப் பகுதிகளிலே நூலகங்களைத் தொடர்ந்து நடத்துவதிலே அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. நிச்சயமாக அவை கருத்திலே கொள்ளப்பட்டு அந்த நூலகங்களை முறைப்படி இயக்க, அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

தரம் உயர்த்துதல்

* 8802—**திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 செப்டம்பர் 2

திருநெல்வேலி தொகுதி, அபிஷேகப்பட்டியிலுள்ள கால்நடை அறிவியல் ஆராய்ச்சி மையத்தைக் கால்நடை மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, இராமையன்பட்டியில் இயங்கிவரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தைத் தரம் உயர்த்தி, ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்க, தேவையான நிதியுதவி கோரி, பதினோராம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்ப இவ்வரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இயங்கிவரும், அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையானது, 1980 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவருகிறது. சுமார் 140 ஏக்கர் பரப்பளவில் உள்ள அந்தக் கால்நடைப் பண்ணையை, கால்நடை அறிவியல் மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகளுக்குப் புதிது புதிதாகத் தினமும் பல்வேறுவகை நோய்கள் தோன்றிவரும் இவ் வேளையில், மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டால் உடனுக்குடன் அந்த நோய்களுக்கான நிரந்தரத் தீர்வு ஏற்படும். மக்கள் ஏற்றம்பெற, விவசாயப் பெருமக்கள், தங்கள் கால்நடையைப் பேணிக் காத்திடவும், பொருளாதாரம் சிறப்படையவும், வெண்மைப் புரட்சியைச் சீரிய முறையில் செயல்படுத்திவரும்வேளையில், கால்நடை மருத்துவக் கல்லூரி அத்தியாவசியம் ஆகிறது. தமிழகத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி இரண்டு இடங்களில்தான் உள்ளன. தென் மாவட்டங்களிலிருந்து கால்நடை மருத்துவப் படிப்புப் பயில, சென்னை அல்லது நாமக்கல்லுக்குச் செல்லவேண்டி உள்ளதால், தென் மாவட்ட மாணவர்கள் மிகுந்த சிரமம் மேற்கொள்கிறார்கள். எனவே, தென் மாவட்ட மாணவர்களின் நலன் காக்கும்பொருட்டு, தமிழக முதல்வர் அவர்கள், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அருகில்

2006 செப்டம்பர் 2]

அமைந்துள்ள அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையைத் தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவக் கல்லூரியாக ஆக்கிட வேண்டுமென்று கேட்டு அதற்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் கூட்டத் தொடரின் கடைசி நாள் வாய்ப்பு என்பதாலும், கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதாலும், இதை நான் கேட்கிறேன். நாய்கள் தொல்லை இப்போது மிகவும் அதிகரித்துவிட்டது. தெருக்களில் ஏராளமான தெரு நாய்கள், நோய்பிடித்து வெறி நாய்களாக மாறிவிடுகின்றன. இதனால், பொதுமக்கள் road-களில் நடந்து செல்லவே அச்சப்படுகிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், மிருக வதைச் சட்டத்தால், நாய்களைக் கொல்லக்கூடாது என்கிறார்கள். வெறி நாய்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, நம்முடைய உள்ளாட்சி மன்ற அமைப்புகளோடு சேர்ந்து, இத்துறை ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆதலால், அவருடைய கோரிக்கையையும் அரசு நிறைவேற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் இருக்கிற கலசப்பாக்கம் கால்நடை மருத்துவமனை, 1967 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்படிப்பட்ட மருத்துவமனையைக் கால்நடை அறிவியல் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்துவதற்கு, இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை என்பது, கால்நடைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சி மையம் என்பது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் செயல்பட்டு வருகிறது. ஆனாலும், உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்க இவ்வரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

150—

படகுப் போக்குவரத்து

*** 1480—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுப் போக்குவரத்து வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுகள் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரப்படும்.